# ஆலந்தூர்-வேளச்சேரி இடையே புதிய வாகன போக்குவரத்து சேவை

## மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிமுகம்

சென்னை, டிச.12–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பயணிகள் பயன்பாட்டிற்கு பல போக்குவரத்து இணைப்புகளை அறிமுகப்படுத்தி உள்ளது. குறிப்பாக ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி, சென்னை மாநகர போக்குவரத்து கழக டவுன் பஸ் மற்றும் மினி பஸ் சேவை, மின்சார ஸ்கூட்டர் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன் மூலம் மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகள் தாங்கள் சேரும் இடத்தை எளிதாக சென்றடைய முடிகிறது.

தற்போது கூடுதலாக ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து பரங்கிமலை மெட்ரோ ரெயில் நிலையம், தில்லை கங்கா நகர் சுரங்கபாதை வழியாக வேளச்சேரியை இணைக்கும் ஏ.சி.டெம்போ டிராவலர் வேன் இணைப்பு சேவையை ரூ.20 கட்டணத்தில் நேற்று முதல் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து உள்ளது. இந்த சேவை 30 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகிறது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஏற்கனவே ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து டி.எல்.எப். மென்பொருள் நிறுவனத்திற்கும், சின்னமலை மெட்ரோ ரெயில் நிலையத்திலிருந்து டைடல் பார்க் (தரமணி) மற்றும் ராமானுஜம் தொழில்நுட்ப பூங்காவிற்கும் ஏ.சி. வசதியுடன் கூடிய வேன் இணைப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.